# ஆதி மார்க்க னீதி மொழி

**September 2025**

***இதழ் 50 – செப்டம்பர் மாதம் 2025 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் பொன்விழா காணும் 50ஆம் இதழாக அருமையான ஆவணி மாத சிறப்புடன் ஆதி மார்க்க னீதி அவையின் நிகழ்வு 11ம் இசை வகுப்பு 3ம் ஆக, ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்ஞிகை மெய் மணத்துடன் மலர்ந்துள்ளது.

சாலை ஆண்டவர்கள் மனிதனை மகான்கள் ஆக்குகின்ற அருந்தவ மந்திரங்களின் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பு ரகசியத்தை தங்களின் ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் நூல் முகப்பில் மானெடுங் ஞாலங் ஞொண்ட இப் பூமண்டலத்திற்கே பாரவான்ஙளின் தீர்க்க தரிசனச் செயல் கை கொண்டு ஏறி வருகின்ற கிரந்தம் - இது ஒன்றுதான் - முதல் நூல் என்று திட்டமாக மக்களினங்ஙள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம் என அருளியுள்ளார்கள்.

அழிவில்லா நித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தையும் கையில் வரவழைத்து தரும் கிரயத்தை உடைய இக்கிரந்தம் படிப்பதன்றி பழக வேண்டிய ஒன்றாக உள்ளது. படித்தால் மட்டும் போதும் என எண்ணுவோருக்கு அது வெறும் ஏட்டுப் படிப்பாகவும் அழிவில்லா நித்திய வாழ்வு என்பது கனவாகவுமே இருக்கும். ஏட்டில் உள்ள பாஷைகள் எல்லாம் கரைத்திடினும் தானாகத் தெரிந்து கொள்ள இயலாத நம் ஊன் உடம்பினுள், ஒரு தலைமுறை காலம் இறைவனின் திருச்செயலாக அறிவு சொரூபமாக அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராக விளங்கும் நித்திய சுயம்பிரகாச மேனியரை ஒரு மெய்க் குருபிரானின் பெரும் தயவால் தான் நாம் அறிய முடியும்.

பாரவான்கள் அருளிய தீர்க்க தரிசனச் செயலாகிய அழிவில்லா நித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தையும் தங்களின் உள்ளமாகிய கையில் ஏந்திய உள்ளங் கையின் ரகசியமறிந்த மேன் மக்களே எம் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். ஜீவனின் சிறப்பாகிய 12 மாதம், 12 ராசி, சூரியனின் சிறப்பு, அத்தனையும் பொதிந்த பொக்கிஷமாக பிரதி மாதமும் மலர்ந்து வருவதே எம் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்ஞிகை. கூவுகின்ற சத்தமதின் குறிப்பு அறியாதவர்க்கு கொடிய நரகம் என காகபுசுண்டர் பிரான் அருளிய படி, பேரிரக்கம் கொண்டு கூவுகின்ற ஆண் குருவின் குறிப்பறிந்து கொடிய நரகிலிருந்து மக்கள் யாவரும் தப்ப வேண்டும் என்பதே எம் அவையின் ஒரே நோக்கம்.



Copyright © AMNA Trust, Chennai 

**சாதிகு லம்பாரா தேயிருந் நமணி**
**மந்ரம வுனவித்தே**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி ஜாதி குலம் பெரியோர் சிறியோர் ஆண் பெண் என்ற பாகுபாடு இன்றி அவர்களின் ஆசீர்பாதத்துடன் அளக்கும் இவ் ஆணிப் பொன் அம்பலத் திருச்செயல் சீர் சிறப்புடன் எமது அவையில் நின்று விளங்கி பீடு நடை போடுகிறது. எனது மக்கள் அனைவரும் இதனை பார்த்து படித்து பயன்பெற வேண்டும். இதனை பார்த்து படித்து தேடுகின்ற எதார்த்த நன்மன மக்கள் யாவரையும் பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி வருக வருக என்ற வசந்த அழைப்புடன் வரவேற்கிறோம்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai	

*னீ இப்போது செய்கிற உனது தவத்தை உடைத்து ஓட்டையாக்குகிற பாடு ஒன்றிருக்கிறது. அதுதான் னீ பிறரைச் 'சிர்' என்று சினப்பது. னீ ஒருவரைச் சினப்பதும், உன்னை ஒருவர் சினந்நதற்குப் பதில் சினப்பதும், உன் தவத்தைப் பிடுங்ஙிக்கொண்டுப் போகும். அது உன்னை னரகத்திற்குக் கூட்டிப் போகிற ஒரு துணை ஆள்.*

*பிறரைக் குறை சொல்லுவதும், குறை சொல்ல எண்ணம் வருவதும், உன் தவத்தைத் தீய்த்துப்போடும். ஆனால், பிறர் கோபிக்கும்போது பொறுத்துக்கொண்டு சகோதர வாஞ்ஞையோடு னடந்நால், அவர்கள் சிந்நின தவம் உனக்கு வந்நுசேர்வதோடு, எமது சொற்படி னடந்ந னன்னம்பிக்கைப் பலனாகிய ஆசீர்பாதப் பலனையும் சேர்த்து வாருகிறாய்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 ஆகஸ்ட் மாதம் அவை நிகழ்வுகள் – 2025 செப்டம்பர் மாதம் வெளியீடு

### 02-08-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:* முதலும் முடிவுமற்ற ஜீவனே அறிவிருக்கும் தலமாகும். மயிலான நம் உயிரின் நிலையே மேலான தௌலத்து. அதனை ஆசான் அருளால் அறிவதே அறிவு அறி பாடம். குருவருளால் நரனிலிருந்து மனிதனாக நாம் மாறும் காலமே வசந்த காலம். அக்காலம் தொட்டே நம் மனதை மிகுந்த ஜாக்கிரதையுடன் நடத்த முடியும்.

**கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் : 216** - அறிவு வடிவாக வரும் குருபிரான் நம் காதில் போட்ட விஷயம் வாய் மூலமாக வெளிப் படுவதே நாம் பெற்ற அறிவின் பயனாகும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* குருபிரான் நம் சிரசில் ஏற்றிய அறிவுச் சுடரால் மற்றவர்களின் அறியாமை இருளை அகற்ற வேண்டும். தன்னை அறிந்து நாம் இன்பமுற தன் திறத்தை தந்திரமாக அருளும் குருவே வெண்ணிலா.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் யோவான் சுவிசேஷம் அதிகாரம் : 5 - வாக்கியம்: 27, 28, 29** யுகந்தோறும் வரும் குருபிரானே மனுஷகுமாரன். அவரே நம்மை பிறவா நெறியில் ஆக்க வல்லவர். ஆசான் அருளால் அரிதுயில் பழகி ஆனந்தக் களிப்படையும் அடியவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* நம் அறிவு பொங்கி வரும் அடையாளத் திருநாளே பொங்கல். அதை பொங்கி வரச் செய்யும் குருபிரானே கோளரிவாளர்.

*ஜீவசகோதரி கல்பனா:* பஞ்சபூத கலப்பினால் உண்டான நம் தேகத்தில் கழுத்துக்கு மேல் இருக்கும் தத்துவங்கள் 36. ஐம்புல நுகர்வின் தலைவனே அடங்காத மனம். அதை அடங்கச் செய்யும் அறிவே பொறியாகும். அவரவரைக் கூத்தாட்டு வானாகிய இறை பொருளை அறியும் ஆற்றல் ஆசான் அருளால் ஆறாம் அறிவு துலங்கப் பெற்ற மனிதனுக்கே உண்டு.

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

### 03-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள், அருளிய **அந்நமே சிந்நை பதிந்ந...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் அருண்:* மனுத் தலையுள் சர்வ சம்பத்துடன் ஐந்து ஆகாசமாக விளங்குவதே நினைவு. தேகமாகிய இக்கடத்தை இயக்கும் பொருளே ஜோதியுள் ஜோதி. பேரிரக்கம் கொண்டு ஆசான் அருளும் பிரம்ம வித்தையே நம்மை காலன் அணுகாமல் காக்கிறது. பதி பசு பாசம் என்ற மூன்றில் பசு, பாசத்தை விட்டு பதியுடன் சேரும் வகை அருளும் ஆசானே பதியாகிய இறைவன்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி சபிதா:* ஐயறிவுடன் வாழும் நரனின் ஆறாம் அறிவை அறியச் செய்து மனுவாக மாற்றும் குருவே நம் ஊண் சுவை இருதயத்துள் உறைந்த நன்னிலம் காட்டி சென்ற நாளை மீட்டுத் தரும் மீட்பர்.

*ஜீவசகோதரி புன்னகை:* ஆகாய கங்கையில் நீராடச் செய்து ஆசான் பூசும் மங்காத திருநீறே நம் நாமத்திற்குரிய பொருளை அறியச் செய்து நிலையா நம் மனதை அலையாது காக்கிறது. ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறிந்து ஆடும் நம் மனதை ஆடாமல் இருக்கச் செய்வதே ஆடிப்பெருக்கு.

*ஜீவசகோதரர் சுந்தர வடிவேலன்:* விநாயகராக வந்து நம் வினை தீர்ப்பவரே குருபிரான். வினை படைக்கும் மனதை தடை செய்ய ஆசான் அருள்வதே பிரம்ம வித்தை.

*ஜீவசகோதரி லலிதா:* தேவரகசியம் பொதிந்த பெட்டகமே ஒரு தனித் தலைமை நற்பதி. மாண்ட மனுவை மண்ணில் இருந்து எழுப்பும் ஏகாட்சர நாயகனை தன்னில் அறிவதே தன்னை அறிதல். பிறவி சுழலில் இருந்து நம்மை மீட்டு நித்திய வாழ்வில் குடியேற்றும் கொண்டல் வாய்மையே கோடி சூரிய பிரகாசத்தை தரிசிக்க செய்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 07-08-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் னரராய்த் தோன்றி...** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
*ஆதியிலே வார்த்தை இருந்தது, அது தேவனிடத்தில் இருந்தது, அது தேவனாகவே இருந்தது* என்பது சத்திய வேதத்தின் யோவான் சுவிசேஷமாகும். தேவன்-மனு-நரன் இவர்களின் அடையாளம் வாக்கில் உள்ளது என்றே சர்வ வேதங்களும் கூறுகின்றன. தேவத் திருமேனி தாங்கி வரும் குருபிரானின் வாக்குத் தத்தம் கொண்டே இத் தேவ ரகசிய செயல்களை நாம் அறிந்து அடைய முடியும்.

**எமபடரடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண்: 6** அவதார புருஷர்கள் வரும் வசந்த காலத்தில் கூடிக் கொள்ளும் மக்கள் யாவரும் அதிகமாம் புண்ணியம் பெற்று நித்திய வாழ்வை அடைகின்றனர். புராதனரான ஆசானின் அருளமுதம் உண்டு, அழியா வாழ்வில் குடியேறிய குருகுல மக்களின் கடமை யாதெனில், தான் பெற்ற பெரும் பேறாகிய அறிவு செல்வத்தை மற்றவர்களிடம் கொண்டு சேர்க்கும் மேலான பரோபகார புண்ணிய காரியம் ஒன்றே.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:** மனிதப் பிறப்பின் அதி அத்தியாவசிய கடமையான தன்னையறியும் தெய்வீக செயலுக்கான உபாயம் அருள்வதே அறிவு அறி பாடம். **அண்டத்துக் கொத்தது பிண்டமென் றறிவாய்** என்ற சாலை ஆண்டவர்கள் திருவாக்கின்படி, பஞ்சபூதங்களும் இறைவனின் கட்டளைப்படி சீராக இயங்கி அண்டமாகிய இப்பூமி செழிக்கிறது. அது போல் இயற்கை உண்மை கடவுளின் கட்டளைப்படி பிண்டமாகிய மனித தேகத்துள் பஞ்சு பூதியங்களும் சீராக இயங்கி ரட்சிக்கிறது. அருட் சக்தியாம் ஆசானின் நாதம் மூலம் அண்ட பிண்டத்தின் அகமிய செயல்களை தன்னுள் அறிந்த பிறகே மும்மலம் கருகி, முச்சுடரெனும் வாசி நிலை கை வசமாகும். ஆசானின் அருட் கடாட்சத்தால் ஒளிரும் அறிவுடன் உயிரின் உன்னதம் அறிந்தோர் மதி வாழ்வில் குடியேறி மரணமிலாப் பெருவாழ்வு பெறுகின்றனர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai September 2025

## 09-08-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** பிறவி என்பது வினைத் தொடரின் காரணமே. முந்தைய ஜென்மம் என்பது நமது முந்தைய மனமே. பிறவிச் சூழலில் சிக்க வைக்கும் வினையாகிய விதி இறைவனின் கையேடு. நம் வினை தீர்க்க இறைவன் தந்த வரமே இப்பிறவி. நல் வினையின் மூலமே ஒரு மெய்க் குருவை சந்திக்கிறோம். இறைவன் தந்த சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனை நம் அகத்தில் தரிசித்து பிறவாமை பெறவே இப்பிறவி.

*ஜீவசகோதரர் கௌதம்:* நம் அகக்கண் திறந்து காட்டி சுயம் பிரகாசப் பொருளான செல்வச் சீர் நபியை தரிசிக்க செய்பவரே குருபிரான். செல்வ **இம்** மொழியை அவரவர்க்கும் ஆன பொருளாக ஆக்கி அலையும் மனதை அறிவாக மாற்றி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் ஒரே நோக்கமாகும்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் : 217** நுண்ணிய அருந் தலமாகிய மயிர்ப்பாலத்தை கடக்க கள்ளமற்ற வைராக்கிய சித்தம் வேண்டும். அதைக் கடக்க எடு குழந்தை போல் இருந்து ஆண்ட குருவைச் சரண் அடைவதே எளிதான வழி.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் கொரிந்தியர்-1 : அதிகாரம் -11, வாக்கியம் - 9:11:12:** ஓர் சுத்த சைதன்ய நாதரின் சிவசக்தி பாகத்தின் தத்துவமே அர்த்த நாரீஸ்வரர். குருவாகிய ஆணிடம் சீடனாகிய பெண் சரணடைந்து சொந்த தேகமாகிய இருதயத்தில் குடியேறி ஜீவனும் சிவனும் ஒன்றென அறிவதுவே மெய்ஞ்ஞானம்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* ஆதி மார்க்க னீதி அவை நிகழ்வுகளே மெய்ஞ்ஞான அறிவை விருத்தி செய்யும் வசந்த காலம். அசையா நிலையில் இருக்கும் சிவம் அசைவுக்கு வந்து சக்தியெனும் மனமாகி சஞ்சலம் அடைந்து காற்றை விட வேகமாக விரிகிறது. குருவருளால் அதை அடங்கச் செய்து நிலைப்பதே அறிவின் நிலை.

*ஜீவசகோதரர் சங்கர்:* கற்பக விருட்சமாக விளங்கும் குருவே நம் அறியாமை விலக்கி அறிவு வடிவான அதிர்ஷ்டத் தலையாக மாற்றுகிறார். அவர் அருளும் அறிவைக் கொண்டு பேரின்பம் பெற வந்தவனே மனு.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 10-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதனெறி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி அன்னலக்ஷ்மி:* மெய் உணர்வே பிறவிச் சுழலில் சிக்காமல் நம்மைக் காக்கிறது. அறிவின் மூலமாக அறிவதே **ஓம்** எனும் உணர்வின் ஆதாரம். குருவருளால் ஐந்தவஸ்தை கடந்தே மனிதன் ஆன்ம சொரூபத்தை உணர முடியும்.

*ஜீவசகோதரி தீபா கிரகதுரை:* உலகக் கல்வி யாவும் பொய்ப்பொருள் ஈட்டும் பொய்க் கல்வியே. தன்னிடம் விளங்கும் நற்றாளை அறியாதவர் கல்லாதவரே. மெய்க் குருவினிடம் பழகித் தேறும் சாகாக் கல்வியே உயிருக்கான மெய்க்கல்வி. ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் ஒன்றாகும் நிலையே அத்வைதம்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கிரகதுரை:* சொர்க்கம், பேரின்பம், புண்ணியம் யாவும் அறிவாலும், நரகம், சிற்றின்பம், பாவம் யாவும் மனதாலும் உடல் உள்ளபோதே அனுபவிப்பதாகும். ஆசான் அருளால் நரன் எனும் வித்தே அடக்கம் இன்னதென அறிந்து தேவனாகிறது.

*ஜீவசகோதரர் அஜய்மகேஷ்:* மெய்க்கல்வி பழகித் தேற உயிரின் மேலான ஒழுக்கம் மிக அவசியம். வள்ளல் பிரான் அருளிய நால் வகை ஒழுக்கமும் மனுவுக்கே உரித்தாகும். இதனை அறியாமல் மனம் போன போக்கில் வாழ்வோர் அடைவது அநியாய மரணமே.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:* நிறை மொழி மாந்தரே நித்திய வாழ்வில் நம்மை குடியேற்ற முடியும். அவரவரிடம் தீர்க்க தரிசனத்தை செயலாக்குவதே ஆதி மார்க்க னீதி அவை. மனதின் வினையால் உண்டான தேகம் குருவருளால் வினை தீர்ந்து பிறவாமை பெறுகிறது. ஆறாம் அறிவை ஆசான் அருளால் அறிவதே தன்னை அறிதலாகும்.

*ஜீவசகோதரி கல்பனா விஜயகுமார்:* ஈமான் கோட்டை எனும் ஆறு வகை இறை நம்பிக்கை அவரவரிடம் திருச்சிற்றம்பலப் பொருளாக உள்ளது. நம் உயிர் வீணாகாமல் காக்கும் உளவு அருள்பவரே குருபிரான். நம் அனித்திய உடலுள் இருக்கும் நித்திய உடலில் குடியேறி வாழ்வதே மரணமில்லா பெருவாழ்வு. ஆசான் அருளும் எழுதாத எழுத்தே இறவாத பஞ்சாட்சரம். அவர் நம்மிடம் அநீதியை அழித்து நீதியை அறியச் செய்யும் நாளே தீர்ப்பு நாள்.

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-08-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சத்தியம் திரண்ட சாயுச்யக் கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
குருவே மதிக் கடலாக வந்து நம் மெய் இருதயத்தை கடல் போல் விரியச் செய்து ஆதியாம் அறிவை அறிய வைத்து பிறவிப் பிணி தீர்க்கிறார்கள். அறியாமை இருளில் இருந்து மீண்டு அறிவுடன் வாழ்வதே மனித லட்சணம். ஆசான் அருளால் அழி உடலின் தன்மை அறிந்து அது கடந்த நித்திய உடலில் குடியேறி வாழ்வதே மெய்யறிவு. மாம்ச இச்சை மரணம், ஆவிக்குரிய சிந்தனையே னித்திய ஜீவன், மறலிகை தீண்டாமையே சர்வ மதங்களின் அடிநாதம் என்பதனை ஆறாம் அறிவை ஆசான் அருளால் அறிந்தே உணர முடியும்.

**திருமெய்ஞானக் கொரல் : திருவாக்கியம் 7 - குருபிரான் அருளமுதம்:**
யுக வித்துக்கென்று ஒரு சிறிய திட்டானது தென்னிந்தியாவில் இருக்கட்டும் என்ற புத்த பகவான் தீர்க்கதரிசனம் மெய் அறிந்தவர்க்கு அகத்திலும், பொய்யர்க்கு புறத்திலுமாக உள்ளது. **தட்டுங்கள் கேளுங்கள் தேடுங்கள்** என்ற சத்தியவேத மகாவாக்கியத்தின் படி எங்கே? எதை? எப்படி? என்ற கேள்விக்கான பதில் ஞானத்தேட்டம் உள்ளவர்களுக்கு ஒரு எதார்த்த தேவகுருவின் கருணையால் கிடைக்கிறது.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:** அறிவு வடிவான ஆசான் அருளால் நம் மனம் அலையாமல் காக்கும் செயலே அறம். அவர் அருளால் அறிவு இருக்கும் தலம் அறிந்தே ஆவி வீணாகாமல் காக்க முடியும். அவரவர் சொந்த வீடாம் ஜீவனைக் கண்டு அதில் குடியேறி வாழும் உயிர்மதி வாழ்வே உடம்பு எடுத்த னற்பலனும் பயனுமாகும்.

பரிசுத்தஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது .



Copyright © AMNA Trust, Chennai September 2025

## 16-08-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் **ஆறிரு சமயத்திற்கும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

ஈராறு சமயங்களும் குருவின் மகிமையும் அவர் அருளும் பிரம்மவித்தை பற்றியே பேசுகின்றன. மனம் அலைவற்று இருப்பதே நின்றதோர் பிரளயம். திரிநேத்திர பிரான் பெற்ற தெய்வீக நிலையை நாமும் பெறுவதற்கான வழியே சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள மெய்வழி. நவநீதமும், எட்டாவது நிலையில் இருக்கும் இறைவனும், அதனை அறிவிக்கும் ஆசானுமான, 18 படிகளும் கடந்து செல்ல தகுதி உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும்.



**கோடாயிதக்கூர் – வாக்கியம் : 218** அழிவுலகில் வரனிற்கும் பேராபத்தில் தப்பிக்கும் அறிவைப் பெற்றவனே மாண்புடைய மனிதன். நவ கோள்களின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து நம் சொந்த தேகமாகிய திரு மாளிகையில் குடியேறும் வழி அருள்பவரே குரு.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் : ரோமர் அதிகாரம் 7 - திருவாக்கியம் எண் 2,4** மாயையில் மரித்தோரை மனுவாக எழுப்பும் பரிசுத்த ஆவியாக வரும் குருவின் வாக்கே ஜீவஅப்பமாகிய பரலோக மன்னா. தேவனின் நித்திய ராஜ்யமான கங்குல் பகலற்ற இடத்தில் வாழப் பழகியவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் :** தன்னை அறிதலே மனுவின் முதல் கடமை. மனுவின் ஆறாம் அறிவை துலங்கச் செய்து உயிர்த் துணையாக விளங்கும் மனதற்ற பரிசுத்தமான மஹரிபத்து என்பதனை நம்மிடம் செயலாக்குவது ஆசானின் கருணையே. அவரருளால் அடி முடி நடு அறிந்து அவ்வாகும் செயலே பேரறிவு. இதனை செயலாக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**

அழிவிலா வாழ்வு வாழ தேகாலயத்துள் புகும் அசலை நினைவூட்டவே ஆலயங்கள். காற்றில்லாக் கருவறையில் உள்ள அசல் இறைவனை தன்னகத்தில் காண்பதே மெய்வழி. தலைகீழ் மரமான மனுவின் இருதயத்தில் பிரகாசம் உண்டாக்குவது ஆசானின் ஓசை கொண்ட திரு நடனமே. ஆசான் அருளிய அகமிய செயலில் னன்னாட்டம் கொண்டு வீடடைவதே மரணமில்லா பெருவாழ்வு. நம் அறிவை ஒளிரச்செய்யும் அறிவு வடிவாம் ஆசானின் வாய்மையை அறிவை அறிந்தோரே அறிவர். அவர் தனது அன்பால் அருளும் பிரம்ம வித்தையே நம்மை சிவமாக்கும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*அஞ்ஞானமாகிய இருளுக்குச் சூரியனும், சிஷ்யனது சன்மார்க்கத்திற்குச் சமர்த்தரும், கிருபையாகிய அமுதத்திற்குச் சமுத்திரமும், அச்சுதமுமான குருவாகிய தங்களுக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 17-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அந்நாளில் அணைத் தெனை யாட் கொண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** நாள் மற்றும் கோளின் ரகசியமே, சூரியன் ஆடி முதல் 6 மாதம் தட்சிணாயணம் பின் உத்ராயணத்தில் பயணம் செய்வது. நாள், கோள், ராசி, நட்சத்திரத்தில் அமைவதே நம் பிறப்பு.

*ஜீவசகோதரர் பாண்டி:* ஜீவ அக்கினி நம்மை விட்டு நீங்கினால் உடலில் சேரும் நீர் ஆவியாகாமல் உடல் கனம் ஏறுகிறது என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. ஆதி புள்ளியில் இருந்து விரிந்த ஜீவன் மீண்டும் அதில் அடங்குவதே அடக்கம். குருவருளால் சாவோலை கிழித்தெறிவதே சன்மார்க்க செயல்.

*ஜீவசகோதரர் முருகன்(ஆவடி):* நால்வகை யோனி எழுவகை தோற்றம் ஆறாம் அறிவு இவற்றை அவரவருள் அறியச் செய்யும் குருவே, மாதா, பிதா, தெய்வம். அவரே நம்மிடம் உள்ள பொய் மெய்யும் பிரித்துக் காட்டி காலனை வெல்லும் காலக் கணக்கை அருள்கிறார்.

*ஜீவசகோதரர் சந்துரு:* ஆறாம் அறிவும், நரன் மனு தேவன் இன்னார் எனவும், நீதியென்ற பிடரிக் கண் இன்னதெனவும் செயலுடன் நிரூபிக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் முருகன்(சின்னாளப்பட்டி):* உலகில் பயணிக்க உதவும் வாகனம் போல் இறை மூர்த்தங்கள் கைலாயம் செல்லும் வாகனங்களே அன்னம், மயில், கருடன், மூஞ்சுறு என்பன. நம் மனமாகிய வாகனத்தில் ஏறி இருதயத்தில் விளங்கும் ஈசனை தரிசிக்க குரு அருளும் செயலே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் பாஸ்கரன்:* நொடி முதல் யுகம் வரை உண்டான சர்வ கால காலங்களின் இருப்பிடமே மனிதனின் ஜீவாதார ஆட்டம். குருபிரான் நம்மிடம் நீதி நடவு செய்யும் ஆதி மூல நேரமான ராப் பகலற்ற இடமே இறைவனின் இருப்பிடம்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* ஒழுக்கத்தின் உச்சம் உணர்த்தும் சிவ வழிபாட்டின் உகந்த மாதம் ஆவணி. உயிரினும் மேலான ஒழுக்கத்தைக் கற்றுத் தரும் பரிசுத்தத் தலமே ஆதி மார்க்க னீதி அவை.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 27-08-2025 ~ புதன்கிழமை ~ நாயகன் இல்லம்
## வினாயகர் சதுர்த்தி சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்...** என்ற வினாயகர் துதி பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
எழுதாத எழுத்தாகிய பிள்ளையார் சுழியே ஜீவனின் ரகசியமாகும். போகாப் புனல் மேல் வீற்றிருக்கும் ஆதி நாயக பிரம்ம சொரூபியே மூலாதார கணபதி. உயர் தத்துவமாம் மனித வடிவும் அதில் விளங்கும் விநாயகரையும் அறிய வியாழமுகம் கொண்ட குருவின் துணை வேண்டும். ஐம்புல நுகர்வான ஐங்கரம், பாச வேரறுக்கும் அங்குசம், வினை தீர்க்கும் கோடாயுதம், முப்புரினூல் இலங்கும் ஒளி மார்பு, முப்பழமான ரவி மதி சுடர், அறுபுரி நூல், பிராண நிலை, பூரணப் பொருள் தாங்கிய துதிக்கை, பேழை வயிறு, அதில் கட்டப் பெற்ற விஷ



Copyright © AMNA Trust, Chennai 

நாகம், இவை யாவும் பொதிந்த வடிவே விநாயகர். இவரின் அவதார மகிமை உணர்த்தும் காரண காரியத்தை மேன்மை தரும் ஒழுக்கத்தால் அறிந்து வாழும் உயிர்மதி வாழ்வே நிம்மதி ஆகும். இவை யாவற்றையும் பல இசை பாடி நம்மை உணரச் செய்வது ஆசானின் சீதக் களப செந்தாமரைப் பூம்பாதமே.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அசுரத்தன்மை கொண்ட நரமுகனை சங்காரம் செய்து தேவனாக மாற்றி வைக்கும் குரு முகமெனும் ஆன முகமே அவதார ரகசியமாகும். மூஷிக வாகனம் ஏறி வைகுந்தம் செல்லும் யோகனிலை பழக்கி வினையகற்றி, கலிமாவெனும் அவரவர் சொந்த தேகமான கயிலாயம் செல்ல துதிக்கையில் தூக்கி விடும் காட்டானையே குருபிரான், அவரே நம் வினை தீர்க்கும் வித்தக விநாயகர்.

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை னிறைவானது.

## 30-08-2025 ~ சனிக்கிழமை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டபகி ரண்டமெலாம்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* புலன் பொறிகள் ஓடாத கங்குல் பகலற்ற இடத்தில் இருக்கும் இறைவனுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய நிலை பெற்றவரே அண்ட பகிரண்டமும் நம் மனக் கண்ணாடிக்குள் இருப்பதை அறியச் செய்யும் ஆற்றல் பெற்றவர்.

**கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 218 :** பிரளயம் வருவதாக சாலை ஆண்டவர்கள் அருளிய அகமியச் செயலின் ரகசியத்தை ஆசான் அருளால் அறிந்தவரே நின்றதோர் பிரளயத்தின் ரகசியமும் பிரளய நீதியும் இன்னதென அறிவர்.

**குருபிரான் அருளமுதம்:** வானம் போன்று அளவற்ற அலையும் எண்ணமும், பூமி போன்று இறுகிய மனமும் கொண்ட மனிதர்களைக் குறிப்பதே சத்தியவேதம் கூறிய *வானமே கேள் பூமியே செவி கொடு* என்பதாகும். இறைவனின் ரகசிய பெட்டகமாகிய மனிதனிடம் மெய் உணர்வு ஓங்க பெரியோர்கள் அருள்வதே திருவடி தீட்சை.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஐம்புல நுகர்வின் காரணப் பொருளே உலகு என்ற வள்ளுவரின் வாக்கறியாத நரனை தேவ நிலைக்கு உயர்த்துவது ஆசானின் நாதமே. மனம் லயமாகச் செய்யும் பிரம்மவித்தை செயலுடன் விதியை மதியாக்கி நம் வீண் நாளை வாழ் நாளாக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **வேதாகமம் – கலாத்தியர் - அதிகாரம் 4: வாக்கியம் : 22, 23, 24** யூதர் இஸ்லாமியர் கிறிஸ்தவர் இவர்களின் நேசத்திற்கு உரியவரே ஆபிரகாம். நித்திய உடல் தோற்றம் இன்றியும், 96 தத்துவங்கள் கொண்ட அனித்திய உடல் தோற்றமுடனும் உள்ளது. இறைவனிடம் மோசே பெற்ற 10 கட்டளைகளும் ஆசான் அருளால் அறிந்தோரே தன் அமானிதக் கடன் தீர்த்து பரமபத வாழ்வு பெறுகின்றனர். தன் நாமத்திற்குரிய பொருளை அறியும் மனுவின் தலையாய கடமையை மெய்யாக செயலாக்கி வைப்பதுவே ஆதி மார்க்க னீதி அவை.

**குருபிரான் அருளமுதம்:**

அவரவர் நாமமாக விளங்கும் ஜீவனை சிவமாக ஆக்கும் செயலே பிரம்மவித்தை. கடத்துள் இருக்கும் கடவுளை அறிய நினைவு, மனம், கவனம், உணர்வு யாவும் உணர்ச்சியில் இருந்து உணர்வுக்கு மாறி நீதி வழி நடக்க வேண்டும். பிரம்மமாகிய மனம் தன் படைப்பை நிறுத்தும் போதே பிரளயம் நின்று வினை தீர்ந்து பிறப்பு ஒழியும். கடவுள் நிலை அறிந்து அம்மயமான பெரியோரின் துணையுடன் கங்குல் பகலற்ற இடத்தில் இருக்கும் ஜீவனின்



Copyright © AMNA Trust, Chennai September 2025

ரகசியமான கடவுள் நிலை அறிவதே அரிய பிறப்பான மனுவின் கடமையாகும். ஹஜ், காசி, கைலாயம், வைகுண்ட யாத்திரை செல்லும் நகல் செயலை அசலாக்கி வேத வழி வாழும் வாழ்வை பரிசுத்த ஆவியின் ஆசீர்பாதத்துடன் செயலாக நடத்தி வருவதே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 31-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி சரஸ்வதி மகேஷ்:* மெய் ஆசான் அருளால் அறிவிருக்கும் தலம் சென்று வருவதே ஜீவப்பிரயாணம். அவர் அருளுடன் நாம் செய்யும் தவமும் ஆலய வழிபாடுமே பலன் தரும். போலிகளின் உபதேசத்தால் நம் காலம் வீணாகுவது நிச்சயமே. நம் மும்மலம் கருக அகக்கண் திறந்து காட்டி ஆறாம் அறிவும் ஐவழி விளைவுக்கு அப்பால் இருக்கும் மெய்வழியும் காட்டும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் பழனி:* கோவில் குளங்கள் சுற்றினாலும் கிட்டாத பலன் தன்னை அறிந்த தவசீலர்களை சந்திக்கும் போதே கிட்டும். குருவின் அருள் மூலமே நரி பரியாவதும் ஜீவன் சிவனாவதும் தன்னை அறியும் தவமுறையும் இன்னதென அறிய முடியும்.

*ஜீவசகோதரி லட்சுமி (பம்மல்)* : படிப்பதன்றி பழகிப்பெற வேண்டிய ஒன்றே வைகுண்ட பதவி. வாசி எனும் குதிரையும், ஆறாம் அறிவும், நவ கிரகமும், அவரவரின் சிரசில் அறிய வைப்பவரே ஆசான். தன்னை அறியாதவன் கூறும் வேதவிளக்கம் யாவும் பொய் சாட்சியே. பொய் மெய்யும் பிரித்துக் காட்டி மூல மந்திரம் ஓதும் முறையும் சைவ அசைவ நிலையும், மூச்சு லயமாகிய மனோ லயமும் தன்னில் கண்டு உணர வைக்கும் ஓர் மெய் குருபிரான் வீற்றிருக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன் (பம்மல்)* : விக்கிரக நகல் வழிபாடுகளின் அசல் செயலை அறிய ஓர் மெய் குருபிரான் நிச்சயம் வேண்டும். அவர் அருளும் வேத சாட்சியுடன் நம் சொந்த தேகத்தில் குடியேறி ஜீவனைக் காண்பதே ஜென்ம சாபல்யம்.

*ஜீவசகோதரி முத்துலட்சுமி:* தாய் தந்தையர் கூறும் அறிவுரைகளும் அறியாமல் செய்யும் விரதம் தியானம் யாவும் அனித்திய வாழ்விற்கே. போலிகள் கூறும் உபதேசம் யாவும் நரகம் செல்லும் ஓர் எளிய வழியே. நம் ஆறாம் அறிவும் மெய்க் கல்வியும் பழகச் செய்து நித்திய மெய் வாழ்வில் வாழச் செய்பவரே மெய் குருபிரான்.

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*தனது இரமிப்பிற்காக, அதாவது பூரணசந்நோஷத்திற்காகக் கூறப்பெறும் பதத்தை விரும்புவோருக்கு, அச்சுதமான - அதாவது அழிவற்ற பதம் எவரால் தரப்பெற்றதோ அத்தன்மைய அச்சுதமும், பரமாத்மாவும், குருவுமாகிய தங்களுக்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**03-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஆதி மான்மியத்தில் இருந்து **ஜகத சற்குணாலங்ம்ரித...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியத்தில் ஆதியோதயப் பருவத்தில் **ஆக்கியோனநந்த வல்லிருள்...** என்ற பாடலும், தொடர்ந்து வரும் மான்மியம் பகுதியும் ஓதுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**10-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துலங்க யிங்கு...** என்ற அமுத கலைக் ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஆதி மான்மியம் அகில வலம் வரும் பருவத்தில் இருந்து **அருள்தலை யுகத்து...** என்னும் பகுதி ஓதப்பெற்று அவை இனிதே நிறைவானது.

**31-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **முன்னுரு தங்ஙுரசிக் குல மாமணி...** என்ற ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது. ஆதி மான்மியம் அகில வலம் வரும் பருவத்தில் இருந்து **அருள்தலை யுகத்து...** என்னும் பகுதி ஓதப்பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*சிஷ்யனது சம்ஸாரத்தினைக் கெடுத்தற்கு ஏதுவானவரும், பக்தர்களது னற் காரியத்திற்கு முன் னிற்கும் முக்கியமான சிங்ஙமும், சிற்சுக வடிவினரும், அச்சுதருமா யிருக்கின்ற ஓங்ஙார வடிவ குருவாகிய தங்ஙளுக்கு னமஸ்காரம்.*

**~ குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

## ஆகஸ்ட் 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 24-08-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

நமது குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருவுளப்படி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் ஏவளூர் கீழ்க்காரணை கிராமம் மாரியம்மன் கோவில் ரோடு அருகில் உள்ள சரவண நந்தவன வளாகத்தில் – ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர் தங்கும் இடம் அடிக்கல் நாட்டும் விழா மற்றும் சரவண நந்தவன வளாகத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதி சக்தி வாலைத்தாய் அம்மன் ஆலய பொங்கல் வைக்கும் திருவிழாவும் நடைபெற்றது.









Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **05-10-2025 / சென்னை ஞாயிற்றுக்கிழமை** | நமது குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** அவர்களின் அவதாரத் திருநாள் மற்றும் **ஆதி மார்க்க னீதி அவையின் செயலாளர்** *மணிவண்ணன்* அவர்களின் பேரக் குழந்தைகள் *சித்தார்த் மற்றும் நிரஞ்ஜன்* அவர்களின் பிறந்தநாள் விழாவும் சென்னை அண்ணா நகரில் அமைந்துள்ள Sea Shell உணவகத்தில் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 ஆகஸ்ட் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 66**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 50 – Month: September 2025*